## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து முகவராண்மையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய நிதிக்கூற்றுக்களைத் பொருண்மையான தயாரிப்பதற்கு பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

முகவராண்மையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகவராண்மை வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன், அல்லது

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து மோசடிகளால் கூட்டிணைவால், இடம்பெறுகின்ற போலி தாக்கங்கள் ஆவணங்களைத் இடம்பெறுகின்ற பாரியதாக தாக்கங்களை இருப்பதானது தயாரிப்பதனால், விட தவறான வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின்

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக முகவராண்மை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் கணக்கீட்டிற்காக சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகவராண்மை தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது

முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் முகவராண்மையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது முகவராண்மையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- முகவராண்மை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- முகவராண்மையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான குறிபுரைகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் 29 ஆம் பிரிவிற்கமைய நேரற்ற முறையை பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சாதாரண செயற்பாடுகளிலிருந்தான உருவாக்கப்பட்ட மிகைகளுடன் ஒப்பீடு செய்யப்பட அவேண்டியதுடன் இது காசுப் பாய்ச்சல் கூற்றின் பகுதி அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்புக்களாக காட்டப்பட வேண்டும். ஆனால் இது இதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தக் குறைபாடு அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் இதனை திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கமைய காசுப் பாய்ச்சல் கூற்றில் வேண்டப்பட்ட வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பிரிவிற்கமைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,231,216,479 பெறுமதியான 05 காணிகள் ஒவ்வொரு மூன்று முதல் ஐந்து ஆண்டுகளிற்காகவும் 2013 ஆம் ஆண்டிலிருந்து மீள்மதிப்பீடு செய்யப் பட்டிருக்காததுடன் இதன் பின்னர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இல. 07, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான கணக்கீட்டிற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், சொத்துக்கள் கிரய அடிப்படையில் கணக்கீடு செய்ய முடியும் அல்லது நியம்மற்கமைய மீள்மதிப்பீடு செய்ய முடியும். சொத்தென்று கிரய அடிப்படையின் கீழ் தேறிய புத்தக பெறுமதி 0 இல் பதிய முடியும். அல்லது சொத்தக்கள் மீள் மதிப்பீட்டு அடிப்படையில் கணக்கீடு செய்யமுடியும். இது மீள்மதிப்பீட்டு அடிப்படையிலான நியம்மத்தின் 47 ஆம் பந்திக்கமைய இந்த கணக்காய்வு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிறகமைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு ரூபா 13,462,445 ஆக இருந்த போதழலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 10,579,813 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல் ரூபா 2,882,632 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இந்த தொகை சொத்துக்கள் கொள்வனவிற்கான முதலீட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 2,882,632 ஆக காட்டப்பட வேண்டிய போதிலும் இது ஏனைய செலவினங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்திட்ட கிரயம் ரூபா 52,987,109 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் இது ரூபா 40,084,809 ஆக காட்டப்பட்டிருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப் பாய்ச்சல் ரூபா 12,902,300 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 52,987,109 ஆக இதுந்தது. எவ்வாறாயினும், முற்பண தீர்ப்பனவிற்காக செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்ட தொகை ரூபா 12,902,300 ஆல் குறைவாக உள்ளது. இந்த தவறு எதிர்காலத்தில் ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டச் செலவினம் காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ஆலோசனை சேவைகள் வருமானம் ரூபா 44,247,430 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட தொகை ரூபா 87,142,128 ஆக இருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 42,866,698 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான ஆலோசனை சேவைகள் வருமானம் ரூபா 44,247,430 ஆக இருந்தது. ஏனைய செயற்திட்ட செலவினம் உள்ளடங்கலாக வருமானம் ரூபா 87,142,128 ஆக இருந்தது. இது செயற்திட்ட ஆலோசனை தொடர்புபட்ட இந்த மொத்த வருமானமாக உள்ளதென வெளிப்படுத்தப பட்டமையால் ஆலேசனை வருமானம் காசுப் பாய்ச்சல கூற்றில் ரூபா 42,866,698 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இந்த தவறு எதிர்காலத்தில் ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஆலோசனை சேவை செலவினம் ரூபா 7,602,728 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட தொகை ரூபா 45,547,441 ஆக இருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 37,944,713 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான ஆலோசனை சேவைகள் செலவினம் ரூபா 7,602,728 ஆக இருந்தது. ஏனைய செயற்திட்ட செலவினம் உள்ளடங்கலாக இருந்தது். ஆகவே, ரூபா 45,547,441 ஆக செயற்திட்ட ஆலோசனை மீதான செயற்திட்ட செலவினமாக பதியப்பட்டிருந்தது. இந்த தவறு எதிர்காலத்தில் ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 9,604,532 ஆன தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அனுப்புதல்கள் காசுப் பாய்சல் கூற்றலிலுள்ள காசுப் பாய்ச்சலாக காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை ரூபா 9,604,532 செலவினமாக கருத்திற் கொள்ள முடியாது. இது திறைசேரியால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து பகிரப்பட்ட தொகையாக உள்ளது. செலவினம் வருமானங்களிலருந்து கழிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சலானது காசுப் பய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | கடற்கரை பாதுகாப்பு நிலையத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் தொடர்பில் 2024 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட்ட முற்பணத்திலிருந்து கழிக்கப்படாத ரூபா 1,171,732 கழிக்கப்பட்டவையாக கருதப்பட்டு நடைபெறும் வேலை கணக்கின் பெறுமதி வரவு வைக்கப்பட்டிருந்தமையால் நடைபெறும் வேலை மீதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய | முற்பணக்கணக்கின் குறைத்துக் காட்டல் மற்றும் நடைபெறும் வேலை கணக்கின் அதிகரித்துக் காட்டல் என்பவற்றின் தவறு திருத்தப்பட்டது. கடற்கரை பாதுகாப்பு நிலையத்தின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தத்திற்காக தீர்க்கப்பட்ட இரண்டாவது பட்டியல் பிரகாரம் தீர்க்கப்படாத முற்பணத் தொகையின் ஒருபகுதி ரூபா 1,171,732 ஆன தொகை திருத்தப்படும் போது | ஒப்பந்தங்களிற்காக செய்யப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முற்பணங்களின் மீதி அதே பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திருத்தப்பட்டது. | |
| (எ) | ரூபா 16,868,610 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதியான மீன் குளிரூட்டி உற்பத்தி இயந்திரம் தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருநத போதிலும் 2020 யூன் 05 இலிருந்து 31 வரையான காலப்பகுதிக்காக அந்த நிறுவனத்திடமிருந்து ரூபா 4,650,000 தொகையான நிலுவையாகவிருக்கின்ற வரியை உரிய நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு 2021 இல் முனவராண்மையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த தொகை கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்காததுடன் உரிய தொகை 2025 மே 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த இயந்திரத்தின் முதலாவது குத்தகையாளர் இயந்திரம் பழுதடைந்த நிலையில் இருந்தமையால் இயந்திரத்தை திரும்பவும் கையேற்பதற்கு அறிவித்திருந்தார். இந்த அடிப்படையில் கட்டணங்கள் எதுவும் செலுத்தப் பட்டிருக்கவில்லை. திரும்பவும் கேள்விகள் கோரப்பட்டதுடன் இன்னொரு நிறுவனத்திற்கு இயந்திரத்தை குத்தகைக்கு வழங்கியிருந்தது. அந்த நிறுவனம் 2024 சனவரியிலிருந்து கொடுப்பனவுகள் செய்யப்பட்டதென தெரிவித்திருந்தது. எவ்வாறாயினும், 02 தவணைக் கொடுப்பனவுகள் மாத்திரம் செலுத்தியிருந்ததுடன் இயந்திரம் பழுதடைந்தமையால் இயந்திரத்தை திரும்பவும் எடுப்பதற்கு 2024 மார்ச் 11 ஆந் திகதிய கடிதம் மூலம் நிறுவனம் அறிவித்திருந்தது. | இந்த இயந்திரம் தொடர்பான உடன்படிக்கை இரத்து செய்வதற்கோ அல்லது உடன்படிக்கை பிரகாரம் கட்டணங்களை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கடமை நிமித்தம் வெளநாடு சென்று திரும்பியிருக்காத நிறுவனத்தின் இரண்டு ஆராய்ச்சி உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பிணை முறிகள் தொடர்பில் மீளாய்வாண்டு தொடர்பில் பெறப்பட்ட ரூபா 2,575,863 ஆன மொத்த தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்காததுடன் முகவராண்மையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அந்த உடன்படிக்கை நிறுவனத்துடன் கைச்சாத்திடப் பட்டிருந்தும் பெறப்பட்ட பணம் நிறுவனத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பாதீட்டு திணைக்களத்திற்கு அவர்களுடைய சொந்த நிதியளிப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப் பட்டிருந்ததென நான் சுட்டிக்காட்டுகன்றேன். வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது இந்த தொகை வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளாக கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,395,920 மொத்தமான 07 விடயங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆனால், செயற்திட்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டன. | இந்த தவறு 2025 ஆம் ஆண்டு கணக்குகளில் திருத்தப்படும். | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சரியான வகுதிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | வழிகாட்டல் 11 இன் பகுதி II மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தி என்பவற்றிற்கமைய கட்டணங்கள் நேரடிக் கிரயம் மற்றும் மேந்தலைக் கிரயங்கள் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், பேரேட்டில் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் செலுத்தப்பட்ட நேரடி கிரயம் மற்றும் மேந்தலை கிரயம் மற்றும் நேரற்ற கிரயங்கள் என்பன தனித்தனியாக காட்டப்படாமல் ஆலோசனை சேவைகளாக ரூபா 66,153,660 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அந்த ஆலோசனை சேவைகளிற்கான கணக்கீடு இலங்கை கணக்கீட்டு நியம இல. 10 இற்கமைய செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளின் செயலாற்றல் மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர்களால் வடிவமைக்கப்பட்டவாறு செயற்திட்ட பூர்த்தியாக்கல் வீதம் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய கணப்பீடுகளில் பெறப்பட்ட செயற்திட்ட கிரய கட்டமைப்பு ஆண்டிற்கான ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய செலவினமாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | பேரேட்டுக் கணக்குகள் நேரடி கிரயம் மற்றும் மேந்தலை கிரயம் மற்றும் நேரற்ற கிரயங்கள் என்பன தனித்தனியாக ஆலோசனை சேவை கட்டணங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | ரூபா 3,521,319 தொகை உள்ளடங்கலாக 05 ஆண்டுகளை விஞ்சியவை மற்றும் 1 - 5 ஆண்டுகளற்கு இடையிலான ரூபா 882,493 தொகையான ஏனைய கடன்பட்டோர் மற்றும் ஊழியர் கடன்கள் மற்றும் ரூபா 41,531,283 வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள என்பவற்றிற்காக கணக்குகளில் அவசியமான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்காததுடன் அவற்றின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தது. | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 5 ஆம் ஆண்டுகளிற்கு மேலாக பெற வேண்டிய ரூபா 270,000 பைப்புக்கள் இரத்து செய்தல், கொழும்பு மாநகர சபையிடமிருந்து 5 ஆம் ஆண்டுகளிற்கு மேலாக பெற வேண்டிய ரூபா 783,744 கடன் மீதிகள் என்பன தொடர்பில் இன்னமும் இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மீதிகள் முற்கொண்டு வரப்பட்டிருந்தது. 1-5 ஆண்டுகளிற்கு இடையில் விசேட காசு முற்பணங்களாக பெறவேண்டிய ரூபா 205,300 இல் ரூபா 100,300 இன்னமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.**

| | விபரங்கள் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | களஞ்சிய இருப்புகளிற்காக பின் அட்டை முறைமை அமுலாக்கப்பட்டிருக்கா ததுடன் இதன் விளைவால் 2025 மே 29 இல் மேற் கொள்ளப்பட்ட பௌதீக களஞ்சிய | 1,809,139 | பின் அட்டைகள், களஞ்சிய புத்தகங்கள், களஞ்சியக் பேரேட்டு கணக்குகள் | தற்போது களஞ்சிய நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளை நெறிப்படுத்தவதற்கு முயற்சிகள் எடுக்கப் படுகின்றதுடன் அந்த தவறுகளை திருத்துவதற்கு முயற்சிகள் | களஞ்சிய பொருளிருப்பு பதிவேடுகளின் உண்மைத் தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு உரிய தகவல்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பரிசோதனையின் பொது ஒவ்வொரு விடயங்களும் புறம்பாக அடையாளம் காண முடியாதிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,809,139 ஆன இருப்பின் உள்ள தன்மைக்கு அவசியமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்காததுடன் உரிய இருப்புக்களின் உள்ளதன்மை மற்றும் உண்மைத் தன்மையை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது. | | | எடுக்கின்றன. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீதிகளின் உண்மை தன்மையை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்ததுடன் ஏனைய கடன் கொடுத்தோர்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 11,777,414 ஆன ஏனைய செலுத்த வேண்டியவைகள் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 11,777,414 | நாட்குறிப்பு பதிவுகள் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக திறைசேரியிடமிருந்து தேசிய நீரியல் அலுவலகத்திற்காக செலுத்த வேண்டிய உரிய தொகை முற்கொண்டு வரப்பட்டிருந்து என அவதானிக்கப்பட்டது. நாங்கள் இதனை சரிசெய்வதற்கு தேசிய நீரியல் பிரிவின் ஊடாக விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். இதுவரை தீர்வு காணப்படவில்லை. அந்த தொகை செலுத்த வேண்டியவையாக காட்டப்பட்டுள்ளது. உரிய பதில் பெறப்பட்டிருந்தும் இதனை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | மீதிகளின் உண்மை தன்மையை நீரூபிப்பதற்கு வேண்டப்பட்ட சான்றுகள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 104, 105 | கடற்கரை பாதுகாப்பு நிலைய நிர்மாண ஒப்பந்தத்ததின் தலைமை அலுவலக கட்டிடத்தில் மண்டப திருத்தங்களிற்காக முற்பண பிணை முறி மற்றும் செயலாற்றல் பிணைமுறி தொடர்பில் பெற வேண்டியிருந்த ரூபா 4,263,649 ஆன நிறுவனத்திற்கு நேரடியாக நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் இதற்கு காரணமான உத்தியோகத்தர்களை அடையாளம் காண்பதற்கும் உரிய நிர்ணயிப்பிற்கும் புலனாய்வுகள் எதுவும் மேறகொள்ளப் பட்டிருக்கவில்லை. | கடற்கரை பாதுகாப்பு நிலைய நிர்மாணம் தொடர்பான நிலைமை அமைச்சு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஆலோசனையில் தீர்வு காணப்பட்டிருந்தது. இதன்படி, நிர்மாண ஒப்பந்தம் தொடர்ந்திருந்ததுடன் இறுதி விலைப் பட்டியல் பெறப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன்படி ஒப்பந்தகாரர் ஒப்பந்தகாரர் சமர்ப்பித்திருந்தார். நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய முற்பண பிணைமுறி இதிலிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் பொறியியலாளர் ஒப்பந்தகாரருக்கு ஏறத்தாழ ரூபா 118,000 தொகை செலுத்த வேண்டியிருந்தது என தெரிவித்திருந்தார். தலைமை அலுவலகத்தின் மண்டபத்தின் நிர்மாணம் இன்னமும் தொடங்கப்பட்டிருக்காதுடன் உரிய பிணை முறி அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும். |
| ii. நிதிப்பிரமாணம் 135 | நிதிக் கட்டுப்பாடு தொடர்புபட்ட நிதி கையளிப்புகளிற்காக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதி பெறப்பட்டிருக்காததுடன் நிதி கையளிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நியமனத்தின் பின்னர் தற்போது முறை பின்பற்றப்பட்டது. அந்த உத்தியோகத்தரின் | நிதிப் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எல்லை ஆவணங்களில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. | அதிகாரம் வருடாந்தம் அளுகை சபை தொர்புபட்டதுன் நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் அதிகாரகையளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணம் முன்னாள் அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தகவல்கள்ற்காக அவசியமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | |
| iii. நிதிப்பிரமாணம் 177(1) | பராமரிப்பு பிராந்திய நிலையத்தில் நாளாந்தம் சேகரிக்கப்பட்ட பணம் நாளாந்தம் அனுப்பப் பட்டிருக்கவில்லை. ஆனால், இது மாதாந்தம் அனுப்பப்பட்டிருந்தது. | பராமரிப்பு நிலையத்தில் நாளாந்தம் பெறப்பட்ட அனுப்புதல்களின் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது. அவை வாரத்திற்கு ஒரு தடவை வங்கியில் வைப்பு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும். |
| iv. நிதிப்பிரமாணம் 703 (1) (a) | திணைக்கள தலைவர் ஒப்பந்தத்தை கண்காணித்து மதிப்பாய்வு செய்வதற்காக பொறுப்பாக உள்ள பொதிலும்சதுப்பு நில நாற்று மேடை நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் நிர்மாணத்தின் போது நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிர்மாண மேற்பார்வை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் பணிப்பாளரின் கீழ் (சேவைகள் மற்றும் செயற்பாடுகள்) மேற் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு மீளாய்வாண்டில் உதவி பணிப்பாளர் மேற்பார்வை செய்யப்பட்ட கடோகல பிராந்திய நிலையத்தில் சதுப்பு நில நாற்றுமேடை நிர்மாணம் தொடர்பில் அறிக்கையிடப்பட்டது. ஆனால், வழங்குநரின் நிதிப் பிரச்சனைகள் இதனைப் பாதித்திருந்தது. | நிதிப் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும். |
| v. நிதிப்பிரமாணங்கள் 756, 770 | 2018 இலிருந்து பல்வேறு இயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் உபபாகங்கள் பழைய பொருட்கள் திருத்தப்பட்டு பயன் படுத்தப்பட்டமையால் களஞ்சியத்தில் பயனற்றிருந்தது. நிதிப் பிரமாணங்களிற்கமைய அவை கையாளப்பட்டன | ஆபத்து முகாமைத்துவ குழு அந்த மோட்டார் சைக்கிள்களை திருத்துவதற்கும் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய நிலையங்களில் அவற்றினை பயன் படுத்துவதற்கும் சேவைகள் மற்றும் செயற்பாடுகள் பணிப்பாளரை அறிவுறுத்தியிருந்தது. | நிதிப் பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 5.4.8 ஆம் பிரிவு | நாரா தலைமை அலுவலக மண்டப புதுப்பித்தலிற்கான ஒப்பந்தம் வழங்குதல் 6 மாதங்கள் தாமதப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவம் ஒப்பந்த வேலைகள் தொடங்கப்பட்டிருக்காமய ால் 2025 ஏப்ரல் 28 ஆன கணக்காய்வு திகதிவரை உரிய செயலாற்றல் பிணைமுறியை காசாக்குவதற்கு நடவடிககை எடுத்திருக்கவில்லை. | இந்த வேலை தொடங்குவதில் தாமதம் இருந்தது. ஒப்பந்தகாரர் இந்த விடயத்தை முன்னர் விவாதித்திருந்தார் 2025 யூன் 30 இற்கு முன்னர் லேலையை பூர்த்தியாக்குவதற்கு உடன்பட்டிருந்தார். ஒப்பந்தகாரர் செயலாற்றல் பிணைமுறியின் உத்தரவாதக் காலப் பகுதியை நீடிப்பதற்கும் உடன்பட்டிருந்தார். | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | 2022 செப்தெம்பர் 09 ஆந் திகதிய 10/2022 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 3(அ) ஆம் பிரிவு | வாகனங்களை தவறாக பயன் படுத்தியதிலிருந்து பெறப்பட்ட ரூபா 382,500 ஆன தொகை பொது திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். இதற்கு முரணாக அந்த தொகை நிறுவனத்தின் வருமானமாக பதியப்பட்டிருந்தது. | 2025 பெப்ரவரி 15 இல் வாகனங்களை தவறாக பயன் படுத்தியதிலிருந்து ரூபா 382,500 ஆன தொகை பெறப்பட்டதுடன் இது நிறுவனத்தினுடைய கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டிருந்தது. பொது திறைசேரிக்கு இந்த தொகை மாற்றுவதற்கு நடவடிககை எடுக்கப்பட வேண்டியிருந்தது என அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 52,984,328 ஆன மிகைக்கு எதிராக ரூபா 24,239,410 பாற்றாக்குறைாக இருந்தது. ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 77,223,738 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 16,957,954 ஆல் குறைவடைந்தமை , ஆளணி வேதனங்கள், பிரயாணச் செலவினம் மற்றும் ஊழியர் நலன்புரி வழங்கல் மற்றும் நுகர்வுகள், ஆராய்ச்சி செலவினம், ஏனைய செயற்பாட்டுச் செலவினம் மற்றும் செயற்திட்ட ஆலோசனை செலவினம் என்பன முறையே ரூபா 24,956,943, ரூபா 1,320,984, ரூபா 672,340, ரூபா 9,757,233, ரூபா 20,409,401 மற்றும் ரூபா 53,907,064 என்பவற்றால் அதிகரித்திருந்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ தறமையீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,880,989 ஆன முற்பணக் கொடுப்பனவு உள்ளடங்கலாக ரூபா 15,937,388 ஆன தொகை 2021 | தற்போது இந்த நிலை தொடர்பான பிரச்சனைகள் தீரக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் | இடையில் நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களிற்காக செயலாற்றல் பிணை |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 அளவில் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிர்மாணம் இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான செலவினம் பயனற்றதாக இருந்தது. மேலும் 2021 பெப்ரவரி 04 இல் பெறவேண்டிய ரூபா 6,986,615 (VAT உள்ளடங்கலாக) முற்பண பிணை முறைி மற்றும் 2022 மார்ச் 18 பெறவெண்டிய ரூபா 1,746,654 ஆன செயலாற்றல் பிணை முறி என்பன காலாவதியாகியிருந்தது. மொத்த முற்பண கொடுப்பனவிலிருந்து ரூபா 2,432,290 ஆன அறவிடப்படாத முற்பணத்தை அறவிடுவதற்கும் அந்த பிணை முறிகளின் திகதிகளை நீடிப்பதற்கோ அல்லது காசாக்குவதற்கோ முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் இதற்கான இறுதி விலைப் பட்டியலை சமர்ப்பித்திருந்தார். முந்திய அறிக்கை பிரகாரம், நிறுவனத்தால் நட்டங்கள் எதுவும் ஏற்பட்டிருக்காததுடன் அந்த சகல கட்டணங்களை நிறுவனம் அறவிடப்பட்ட பின்னர் பொறியியலாளர் அறிக்கையிட்டிருந்தார். இன்னமும் ஒப்பந்தகாரருக்கு ஏறத்தாழ ரூபா 118,000 தொகை செலுத்த வேண்டியிருந்தது. | முறி மற்றும் முற்பண பிணை முறிகளிற்கான தகதிகளை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அந்த தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்திலிருந்து சென்றிருந்த உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 5,874,798 தொகை தொடரிபில் கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக ஒண்டொன்றிற்கு இரண்டு தவணைப் பணங்களில் ரூபா 587,479 தொகை செலுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்படி, 2024 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய மொத்த தொகை ரூபா 592,273 பெறப்பட்டதுடன் முகவராணடமை ரூபா 2,467,575 ஆன நிலுவையாகவிருக்கின்ற தொகையை அறவிடுவதற்கு இன்னமும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 யூலை இறுதியளவில் பிணை முறியின் முழுத் தொகையும் செலுத்தப்படும் என 2025 யூன் 16 இல் ஈ மெயில் மூலம் உரிய அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. | முகவராண்மை நிலுவையாகவிருக்கின்ற தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சதுப்புநில நாற்றுமேடை நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் தொடர்பிலான நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் 2024 திசெம்ர் 30 இல் ஒப்பந்தமிடல் முகவராண்மைக்கு ரூபா 1,518,901 செலுத்தப்பட்டது. | இங்கு வெலைகள் பூர்த்தியாக்குவதில் தாமதம் நிலவியிருந்த போதிலும் இந்த தொகை இந்த செலவினம் பயன்ற்ற செலவினமாக இருப்பதை அனுமதித்திருக்கவில்லை. 2025 யூன் 08 அளவில் இந்த வேலையை பூர்த்தியாக்குவதற்கு அவசியமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, செயற்திட்ட நடவடிககைகள் பூர்த்தியாக்கப்பட்டு உரிய | நிர்மாண வேலைகள் வேலைத்திட்ட பிரகாரம் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நோக்கங்களை அடைய முடியும். | |
| (ஈ) | வெளிநாட்டுப் பயிற்சிக்காக வெளிநாடு சென்றிருந்த 744 ஆம் இலக்க உத்தியோகத்தர் 2024 மே 18 இல் கடமைக்கு திரும்பாததால் நிறுத்தப்பட்டிருந்தார். ஆனால் அவர் 2024 யூன் 07 ஆந் திகதிய NARA/ADM/02/0605/744/23 ஆம் இலக்க பணிப்பானர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் உத்தியோகத்தர் இராஜனாமா செய்திருந்தார். 2024 செம்தெம்பர் 10 இல் நடைபெற்ற 47 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட பொதிலும் பிணை முறி பெறுமதியில் ரூபா 1,228,744 ஆன நிலுவையாக இருக்கின்ற தொகை 2025 மே 08 ஆன கணக்காய்வு திகதியில் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொகை தொடர்பான தெளிவுபடுத்தல்களில் தாமதம் நிலவியதுடன் உத்தரவாதமளிப் பவரிடமிருந்து அறவிடுவதற்கு கணிப்பீடு செய்ய வெண்டியிருந்தது. 2025 மே மாதத்திலிருந்து உரிய உத்தரவாதமளிப்பவரிடமிருந்து அறவீடுகள் செய்யப்பட்டிருந்தது. | முகவராண்மை நிலுவையாகவிருக்கின்ற தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2014 இல் ரூபா 42,500,000 பெறுமதியுடைய 20.7582 ஹெட்டயர் சுவீகரிக்கப்பட்ட காணியின் உரிமையாண்மை இன்னமும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | 1981 இன் 54 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 35 ஆம் பிரிவிற்கமைய வர்த்தமாணி அறிவித்தல் ஊடாக நடை முறைப்படுத்துகின்ற உரிமையை பெறுதல் போதியதாக உள்ளதென வரிசை அமைச்க்கு நாங்கள் அறிவித்திருந்தது. | காணியின் உரிமையாண்மையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரேகாவா பிராந்திய நிலைய மீன் வளர்ப்பு மேம்பாட்டிற்கான 06 குஞ்சு பொரிக்கும் நிலையங்களிலுள்ள 87 தடாகங்களில் 33 தடாகங்கள் 2025 பெப்ரவரி 25 ஆன கணக்காய்வு திகதி வரையும் பயன்படுத்தப் பட்டிருக்கவலில்லை. அதில் 21 தொட்டிகள் பல ஆண்டுகளாக பயன் படுத்தப்பட்டிருக்காததுடன் பெரிய மரங்களின் வேர் அமைப்புகள் அந்த தடாகங்களில் வளர்ந்துள்ளது. மற்றும் தற்பொது மீன் தொட்டிகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 03 பெரிய வட்டத் தடாகங்களும் 02 மத்திய அளவுத் | மீன் தொட்டிகளிற்கு அருகில் பெரிய மரங்கள் வளர்ந்தமையால் தண்ணீர் கசிவு ஏற்பட்டுள்ளது. அரச மரக் கூட்டுத்தாபனம் அந்த மரங்களை அகற்றுவதற்கு இருக்கின்ற அரச நடைமுறைப் பிரகாரம் அறிவித்திருந்தது. அந்த மரங்களை அகற்றிய பின்னர் தண்ணீர் தடாகங்கள் திருத்தப்படுகின்றன. தடாக நடவடிக்கைகள் திரும்ப தொடங்கப்பட்டது. கடந்த காலங்களில் அந்த மீன் தடாகங்கள் ரேகாவா பிராந்திய நிலையத்தால் அமுலாக்கப்பட்ட பல்வேறு செயற்திட்டங்களிற்காக | ஆகக்கூடிய வினைத்திறனுடைன் மீன் தடாகங்களை பயன்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | தடாகங்களும் 02 சிறிய அளவுத் தடாகங்களுமாக 07 பைபர் கிளாஸ் தடாகங்கள் நிலையத்தின் வளவில் எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன் படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தன. | பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த தடாகங்கள் பல தடவைகள் அழிவடைந்திருந்தது. திருத்தப்பட்ட விடயங்கள் திரும்பவும் பயன் படுத்தப்பட முடியும் என நம்பப்படுகின்றது. . | |
| (ஆ) | 2025 பெப்ரவரி 25 இல் உள்ளவாறு 14 உத்தியோகத்தர்கள் ரேகாவா பிராந்திய நிலையத்திற்கு இணைக்கப் பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டிற்காக நிர்வாக செலவினங்களில் ரூபா 18,105,639 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த பொதிலும் பொதிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தலைமை அலுவலகளம் நியைத்தின் நடவடிகரககளை முறையாக மேற்பார்வை செய்வதற்கும் அதன் நோக்கங்களை அமைவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டிருந்தும் பெறப்பட்ட வருமானம் குறைவாக இருற்தது. எவ்வாறாயினும், ஊழியரிற்கான சம்பளங்கள் கட்டாயமாக செலுத்த வேண்டியிருந்ததுடன் பெருமளவு தொகையை கொண்டிருந்தது. மேலும், நிலையம் இலாபம் இலாபம் உழைக்கும் நோக்கத்துடன் தாபிக்கபட்டிருக்காததுடன் இது ஆராய்ச்சி நடவடிக்கைகளை நடாத்துவதை மாத்திரம் கொண்டுள்ளது என விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தியாக்கபபட்ட பின்னர் இருக்கின்ற மீன் குஞ:சுகளை விற்பதன் ஊடாக பணத்திணை உழைத்திருந்தது. | நிலையத்தின் நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மத்திய ஆய்வுகூட கட்டிட தொகுதி செயற்திட்டத்திற்கான ஆலோசனை ஒப்பந்தம் தொடர்பில் 2018 இல் ஏற்பட்ட ரூபா 3,900,673 ஆன ஆலோசனை கட்டணம் ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையால் செலவு செய்யப்பட்ட பணம் பயனற்றதாக இருந்தது. | இந்த வேலை 2017 ஆகஸ்ட் 09 ஆந்திகதிய AMA/17/1635/725/025 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கமைய நிதிகளை வழங்குவதற்கு நிதி அமைச்சின் அனுமதியுடன் தொடங்கப்பட்டது. பின்னர் நாட்டின் பொருளாதார சீர்கேடு காரணமாக இந்த நொக்கத்திற்காக நிதிகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், தற்போது வேறு மாற்றுவழி நிதி உதவி ஏற்பாடுகளை கருத்திற் கொண்டுள்ளோம் என உங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். | திட்டமிட்டவாறு ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 இல் தொடங்கப்பட்டிருந்த கற்பிட்டி தடாக கட்டிடத்தொகுதி மற்றும் 2019 இல் தொடங்கப்பட்ட பல் இன மீன்குஞ்சு தடாகங்கள் என்பவற்றிற்கான ஒப்பந்தத்திற்கான செயற்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்பட்ட மொத்த செலவினம் ரூபா 1,814,971 சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | கற்பிட்டியில் மீன் குஞ்சு தடாகம் நிர்மாணிப்பதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டு அஜமலாக்கப்பட்டிருந்தது. நாட்டின் பொருளாதார சீர்கேடு காரணமாக இதற்காக நிதிகள் உதுக்கப்படவில்லை. 2024 இல் இந்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவிகளிற்காக செயற்திட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது தற்போது வேறு மாற்றுவழி நிதி உதவி ஏற்பாடுகளை கருத்திற் கொண்டுள்ளோம் என உங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். | திட்டமிட்டவாறு ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |
| (இ) | பல் இன மீன்குஞ்சு தடாக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2022 பெப்ரவரி 16 இலிருந்து 30 ஆண்டு காலப் பகுதிக்காக கற்பிட்டியில் குடுவா பகுதியில் 3 ஏக்கர காணியை குத்தகைக்கு எடுத்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் காணி திருத்தங்களிற்காக ரூபா 1,631,963 கிரயம் ஏற்பட்டிருந்தது. இந்த காணி உரிய நோக்கங்களிற்காக பயன் படுத்தப்பட்டிருக்காததுடன் பெருமளவான காணி பயன் படுத்தப்படாமலும் குறைவாக பயன் படுத்தப்பட்டும் இருந்தது எனவும் காணியை சுற்றி நிர்மாணிக்கப்பட்ட வயர் வலை வேலி முறையாக பராமரிக்கப்படாமையால் அழிவடைந்திருந்தது எனவும் 2025 யூன் 17 இல் இடம்பெற்ற கணககாய்வு பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த காணி இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் செயற்திட்ட அமுலாக்கலிற்காக பயன்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் அதன் மீதான வேலைகள் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. இந்த காணி இதற்காக உள்ளது. வேலைகள் மிகவும் தொடங்க இயலுமென நான் நம்புகின்றேன். | காணியானது விருத்தி செய்யப்பட்டு உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2011 ஆம் ஆண்டில் ரூபா 12 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட "தரணி" படகு இறங்குதுறை 10 ஆண்டுகளிற்கு மேலாக எவ்வித பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ளாமல் பயனற்று இருந்தது. | இந்த படகு திமிங்கலத்தை கண்காணிப்பதற்கான ஒரு பரிசோதனை முயற்சியாக காட்டப்பட்டது. இது தோல்வியடைந்தமையால் தற்போது நிறுவனத்திற்கு வருகைதரும் மாணவர்களின் கல்விக்காக பயன்படுத்தப்படுகின்றன. | படகு இறங்குதுறை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 7,512,800 பெறுமதியான 9391 ஒயிசர் மாதிரி இருப்புக்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது இருந்தது. | இந்த செயற்கை சிப்பி மாதிரி நாரா நிறுவனத்திற்கு நன்கொடை யளிக்கப்பட்டதுடன் ஆராய்ச்சி நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டது. மேலும் ஆராய்ச்சி அறிக்கைகள் | சிப்பி மாதிரி முறையாக ஆராய்ச்சி நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டதுடன் மிகுதியாக இருக்கின்ற இருப்புகள் சேகரிக்கப்பட்டது. 131 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் எடுக்கப்பட்ட தீர்மானங்களிற்கமைய அந்த இருப்பக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிக்கை வழய்கப்பட்டது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு அறிக்கை வழங்கப்பட்டது. இதன்படி, அந்த இருப்புக்கள் மீனவர்களிற்கு வழங்க அல்லது எதிர்காலத்தில் மீனவர்களுடன் ஆராய்ச்சிக்கு பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டது. | |
| (ஊ) | முகவராண்மையின் அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்ப பிரிவில் ரூபா 21,373,564 பெறுமதியான 3 ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் பெறுமதி தெரியாத 2 உபகரணங்கள் பயனற்று இருந்தது. | ஒரு ஆய்வுகூட கருவியின் UPS முறைமை மின்சார கசிவு காரணமாக செயலிழந்திருந்தது. ஆகவே, புதிய UPS முறைமை பெற்ற பின்னர் பகுப்பாய்வை திரும்ப தொடங்க முடியுமென நம்பப்படுவதுடன் இன்னொரு கருவியின் வாயு தீர்ந்து விட்டமையால் வாயுவை பெற்ற பின்னர் பகுப்பாய்வை திரும்ப தொடங்கபடுமென நம்பப்படுகின்றது. ஏனைய கருவிகள் உபபாகங்கள் கிடைக்காமையால் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது கிஸ்மைட் அளவு கருவிக்கான சான்றிதழ் மதிப்பீட்டை பெறுவதற்கான நடைமுறைகள் செயற்பாட்டில் உள்ளன. ஆகவே, எதிர்காலத்தில் அடையாளம் தெரியாத சகல 2 கருவிகளும் தரவை வழங்க முடியுமென நம்பப்படுகின்றது. | ஆய்வுகூட உபகரணங்கள் ஆகக்கூடிய வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | 2025 பெப்ரவரி 25 இல் நடாத்தப்பட்ட பௌதீக பரிசோதனையின் பொது சுற்றுலா பெறுமதியுள்ள ஒரு தடாகத்திற்கு அருகில் அமைந்துள்ள ரெக்காவ பிராந்திய நிலையம் 20.7582 ெெட்டயர் பரப்பளவை கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அத்துடன் அலுவலகம் மற்றும் மீன் தொட்டிகள் அமைந்துள்ள நிலப் பகுதியை தவிர மிகுதி நிலப் பரப்பு பயன்படுத்தப்படாமலும் செயலற்றும் இருந்தது. மேலும் அந்த | இந்த நிறுவனம் ஆராய்ச்சி நடவடிக்கைகளை நடாத்தவதாக உள்ளது. சுற்றுச்சூழல் அமைதியாகவும் கடமைகளை மேற்கொள் உகந்த இடமாகவும் இருக்க வேண்டும். ஆகவே, உரிய காணித் துண்டு அபிவிருத்தி செய்யப்பட அல்லது அதகூடிய வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். கண்காணிப்பு கட்டிடத்தை கட்டுவதற்கு கொண்டு வரப்படும் பொருட்கள் | திட்டமிடப்பட்டவாறு கண்காணிப்பு நிலைய கட்டிடத்தின் நிர்மாணம் பூர்த்தியாக்குவதற்கும் பிராந்திய நிலைய காணியை அதிகூடிய வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | இடத்திலிருந்து தடாகத்தை பார்ப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட கண்காணிப்பு அறை இடைநடுவில் நிறுத்தப்பட்டது. மேலும் மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்ட நிர்மாணப் பொருட்களிற்கு செலவழிக்கப்பட்ட ரூபா 475,170 ஆன தொகை பயனற்ற செலவினமாக உள்ளது. | மழையலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியதும் சேமித்து வைக்க வேண்டிய தேவை இருப்பதை அவதானிக்கப்பட்டது. சேவைகள் செய்றபாடுகள் பணிப்பாளர் இது தொடர்பில் மேலும் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு அறிவித்திருந்தார். | வேண்டும். |
| (ஏ) | கற்பிட்டி பிராந்திய நிலையம் தாபித்தலிற்கான நோக்கங்களில் ஒன்று ஆராய்ச்சியை நடாத்துவதாக இருந்துடன் ஆராய்ச்சி நோக்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் ஆராய்ச்சி நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2025 யூன் 17 ஆன கணக்காய்வு திகதியில் அழிவடைந்திருந்தது. மேலும் நிலையத்தை தாபித்தலின் நோக்கம் சதுப்பு நில மரநடுகை மற்றும் மீன் வளர்த்தல் செயற்திட்டத்தை பேணுவதாக உள்ள போதிலும் 2025 யூன் 17 ஆன கணக்காய்வு திகதியில் அந்த நோக்கங்களை அடைவதற்கு தவறியிருந்தது. | இந்த கட்டிடம் பல அண்டுகளாக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் இதற்கான தேவை எதுவும் எழுந்திருக்கவில்லை. ஆகவே, இது புதுப்பித்தல் வேலகளிற்காக 2026 ஆம் ஆண்டற்கான திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பிராந்திய நிலையம் தாபித்தலிற்கான நோக்கங்கள் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 15 சுருள் பிளாஸ்ரிக் மெஸ் வலை கல்பிட்டி பிராந்திய நிலைய களஞ்சிய வளவில் எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதேநேரம் பல பிளாஸ்ரிக் தொட்டிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் திரும்ப பயன் படுத்தப்படாதிருந்ததுடன் திரும்பவும் அழிவடைந்திருந்தது. | அந்த பொருட்களின் திகதி காலாவதியாகி இருந்தும் உடனடியாக உரிய இருப்பு புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு அகற்றுவதற்கும் நடவடிகைக எடுக்கப்ப்டிருக்கவில்லை. | பொருட்கள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |